தினமணி

**தோட்டக்கலைப்பயிர் சாகுபடி விவசாயிகள் கவனத்துக்கு**

First Published : 11 Apr 2010 10:18:45 AM IST

திருப்பூர், ஏப். 10: தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் திருப்பூர் வட்டாரத்தில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் 52 விவசாயிகளை, 5 நாட்கள் சுற்றுலா அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

÷தோட்டக்கலைத்துறை சார்பில் ஏப். 19 முதல் 23ம் தேதி வரை மேற்கொள்ளப்படும் இச்சுற்றுலாவின் போது, மதுரை வேளாண்மை கல்லூரி சார்பில் நடக்கும் தோட்டக்கலை பண்ணை, பூவானி, பேச்சிப்பாறை, கன்னியாகுமரி உள்ளிட்ட இடங்களில் உள்ள பழப்பண்ணைகள் மற்றும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

÷சுற்றுலாவில் பங்கேற்க விரும்பும் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் திருப்பூர் வட்டார விவசாயிகள், உடனடியாக திருப்பூர் தோட்டக்கலை இயக்குநர் அலுவலகத்தில் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

÷இத்தகவலை திருப்பூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் பி.சந்தானகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**ஓட்டேரி மூலிகைப் பூங்கா நவம்பரில் திறப்பு: மேயர்**

First Published : 12 Apr 2010 07:37:46 AM IST



சென்னை ஓட்டேரியில் உள்ள மூலிகைத் தோட்டத்தை ஞாயிற்றுக்கிழமை பார்வையிடுகிறார் மேயர் மா.சுப்பிரமணியன். உடன், புரசைவாக்கம் தொகுதி எம்.எல்.ஏ. வி.எஸ்.பாபு.

சென்னை, ஏப். 11: சென்னை ஓட்டேரியில் அமைக்கப்பட்டு வரும் மூலிகைப் பூங்கா வரும் நவம்பரில் திறக்கப்படும் என்று மேயர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மூலிகைப் பூங்காவை ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்த மேயர் கூறியது:

ஓட்டேரி மூலிகைப் பூங்காவில், பொதுமக்களுக்குப் பயன் தரும் வகையில் மூலிகை செடிகள், அவற்றின் பயன்பாடு குறித்து எடுத்துரைக்கும் கல்வெட்டுகள், நடைபாதைகள், இருக்கைகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தவும், இயற்கை வனப் பூங்கா ஏற்படுத்தவும் திட்டமிட்டு, ஆடாதொடை, நொச்சி, மலைவேம்பு, திப்பிலி, பெரிய நங்கை, வல்லாரை, மருதாணி, கஸ்தூரி மஞ்சள், ஆலமரம், அரசமரம், நாகமல்லி உள்ளிட்ட 50 வகையான மருத்துவ குணங்கள் கொண்ட 8 ஆயிரம் தாவரங்கள் நடப்பட்டு, 10 அடி உயரத்துக்கு பராமரித்து வளர்க்கப்பட்டுள்ளன.

செடிகள் நடுதல், சாலைகள் அமைத்தல், மேல்தொட்டி அமைத்தல் பணிகள் ரூ. 4.50 லட்சத்திலும், தண்ணீர் குழாய்கள் அமைக்கும் பணி ரூ. 1.50 லட்சம் செலவிலும் முடிக்கப்பட்டுள்ளன.

சித்திரங்கள் வரைதல், நீரூற்று மற்றும் தெரு விளக்குகள் அமைக்கும் பணி இப்போது நடைபெற்று வருகிறது.

பூங்கா பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்பட்டு, நவம்பர் மாதம் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்படும். துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் பூங்காவை திறந்து வைக்கவுள்ளார் என்றார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 71.50 அடி**

First Published : 12 Apr 2010 03:11:59 AM IST

தஞ்சாவூர், ஏப் 11: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 71.50 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 2,062 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 1,900 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**உப்பு குறித்த விழிப்புணர்வு நடைப்பயணம்**

First Published : 12 Apr 2010 12:38:56 AM IST

புதுச்சேரி, ஏப்.11: புதுச்சேரியில் அதிக உப்பை உணவில் சேர்த்துக் கொள்வதை தவிர்ப்பது குறித்த விழிப்புணர்வு நடைப்பயணம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

÷புதுச்சேரி கடற்கரை சாலையில் ஜ்ஜ்ஜ்.ள்ன்ஞ்ஹழ்க்ஷல்.ர்ழ்ஞ் இணையதளம் மற்றும் கிழக்குக் கடற்கரை மருத்துவமனை சார்பில் இந்த விழிப்புணர்வு நடைப்பயணம் நடைபெற்றது. ÷

கடற்கரை சாலை கார்கில் நினைவு சதுக்கத்தில் தொடங்கி, டூப்ளெக்ஸ் சிலை வரை சென்ற நடைப்பயணத்தை எம்எல்ஏ ஆர்.விஸ்வநாதன் தொடங்கி வைத்தார். ÷நடைப்பயணம் குறித்து மருத்துவர் என். முருகேசன் பேசியது: அதிக உப்பு பக்கவாதம் மற்றும் மாரடைப்பை ஏற்படுத்தும். உப்பை குறைத்தால் மருத்துவச் செலவு குறையும்.

÷உப்பு மெதுவாக உயிரைக் கொல்லும் நஞ்சு என்பதை வலியுறுத்தி இந்த நடைப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

உடலில் உள்ள சோடியம் சத்து குறித்து நாம் இப்போது அதிகம் பேசி வருகிறோம். இது ரத்த அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு சுகாதார பிரச்னைகளுக்கு வழி வகுக்கும்.

÷பதப்படுத்தப்பட்ட உணவு, டப்பாவில் அடைக்கப்பட்ட உணவு, பாலாடைக் கட்டி ஆகியவற்றை எதிர்த்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் முதல் முயற்சி இது என்றார்.

÷இணையதளத்தின் நிறுவனர் டாக்டர் ராஜன் ரவிச்சந்திரன் பேசியது:

அந்த காலத்தில் உடல் உழைப்பு அதிகம் இருந்ததால் உப்பு அதிகம் தேவைப்பட்டது. இன்று குளிர்சாதன வசதி மற்றும் கணினியோடு வாழ்க்கை என்றான பின்னர் உப்பின் அளவை நாம் குறைத்தே ஆகவேண்டும்.

÷பதப்படுத்தப்படாத புதிய உணவுகள் அல்லது மீன், இறைச்சி, கீரை, தக்காளி, கேரட் போன்ற இயற்கையிலேயே சோடியம் உப்பு சத்துள்ள உணவுகளையே உண்ண வேண்டும் என்றார்.

÷சுகாதாரத்துறை செயலர் திலிப்குமார் பாலிகா, அரசு பொது மருத்துவமனை கண்காணிப்பாளர் டாக்டர் கோவிந்தராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விவசாயத்தை காப்போம்!**

First Published : 12 Apr 2010 06:29:38 AM IST

கோவை, ஏப்.11: பெரும்பாலான மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் விவசாயத் துறையை காக்க வேண்டியது அனைவரது கடமை என தமிழக அரசின் வருவாய்த் துறை செயலர் கே.தனவேல் கூறினார்.

கோவை ஏஜேகே கலை அறிவியல் கல்லூரியில் கல்லூரி தின விழா ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. இவ் விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, கே.தனவேல் பேசியது:

இந்தியா ஓர் விவசாய நாடு. மத்திய அரசு அண்மையில் வெளியிட்ட புள்ளிவிவரப்படி, வேளாண் வளர்ச்சி எதிர்மறையாகச் சென்று கொண்டிருப்பது புலனாகிறது. இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் 17 சதவீதம் பேர் விவசாயத்தை நம்பிதான் வாழ்க்கை நடத்துகின்றனர். இதே நிலை தொடர்ந்தால், லட்சக்கணக்கான ஏழை விவசாயிகள், தங்களது வேலையை இழக்க வேண்டிய அவல நிலை உருவாகும். விவசாயம் வீழ்ந்துவிடாமல் காக்க வேண்டியது நம் கடமை. பொருளாதார மந்தநிலையால் தொழில் துறை பாதிக்கப்பட்டிருந்தாலும், தனது சீரான வளர்ச்சியை அத் துறை தக்க வைத்துக் கொண்டது. அதற்கு அடுத்து குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது சேவைத் துறை. மெத்தப் படிக்கும் மாணவர்களுக்கு இத் துறையில் எளிதில் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

விஞ்ஞான மனிதவளத் துறையில் முன்னோடியாக அமெரிக்கா திகழ்கிறது. அதற்கு அடுத்த இடத்தை ரஷ்யா பிடித்துள்ளது. இந்தப் பட்டியலில் 3}வது இடத்தில் இந்தியா இடம்பெற்று இருக்கிறது. விஞ்ஞானிகள் அதிகமுள்ள இந்தியாவில்தான் மொத்த மக்கள்தொகையில் 25 சதவீதம் பேர் படிப்பறிவு இன்றி வாழ்கின்றனர். மத்திய அரசு அமலாக்கியுள்ள கட்டாய கல்வித் திட்டம் படித்தவர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் என்றார்.

ஏஜேகே அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் அஜித்குமார் லால் மோகன், அறங்காவலர் ஆர்.எஸ்.லால் மோகன், கே.என்.நிட்வேர் நிர்வாக இயக்குநர் கே.எம்.சுப்பிரமணியம் உள்பட பலர் பங்கேற்றனர்.

**மாம்பழக் கூழ் தொழிற்சாலைகளுக்கு தடையின்றி மின்சாரம் வழங்கக் கோரிக்கை**

First Published : 12 Apr 2010 01:01:02 AM IST

கிருஷ்ணகிரி, ஏப்.11: கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டத்தில் உள்ள மாம்பழக் கூழ் தொழிற்சாலைகளுக்கு தடையின்றி மின்சாரம் வழங்க வேண்டும் என மாம்பழக் கூழ் உற்பத்தியாளர்கள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிருஷ்ணகிரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் சித்தூர் மாவட்ட மாம்பழக் கூழ் உற்பத்தியாளர்கள் சங்கக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நடப்பு ஆண்டில் மாம்பழத்தின் விலை கடந்த ஆண்டைக் காட்டிலும் டன்னுக்கு ரூ.5 ஆயிரம் முதல் ரூ.8 ஆயிரம் வரை கூடுதலாக இருக்கும். இதனால் அயல்நாட்டு மொத்த விற்பனையாளர்கள் மாம்பழக் கூழுக்கு கூடுதல் விலை அளிக்க வேண்டும்.

மாம்பழக் கூழ் உற்பத்தியாளக்களுக்கு வங்கிகளில் குறைந்த வட்டியில் கடன் வழங்க வேண்டும். மாம்பழுக் கூழ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு 24 மணி நேரமும் தடையின்றி மின் விநியோகம் செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் வெங்கடசாமி தலைமை வகித்தார். செயலர் மாதவன், சித்தூர் மாவட்டத் தலைவர் பாலகிருஷ்ணன், துணைத் தலைவர் ஜெயபிரகாஷ் ரெட்டி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**இந்தியாவில் 40 சதவீத நிலங்களே பாசன வசதி பெற்றுள்ளன**

First Published : 12 Apr 2010 12:59:59 AM IST

ஒசூர், ஏப்.11: இந்தியாவில் 40 சதவீத நிலங்கள் மட்டுமே நீர்ப்பாசன வசதி பெற்றுள்ளன. மீதி உள்ள 60 சதவீத நிலங்கள் நீர்ப்பாசனவசதி பெற மத்திய அரசிடம் திட்டம் ஏதுமில்லை என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் டி.ராஜா கூறினார்.

தேன்கனிக்கோட்டையில் நடைபெறும் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில மாநாட்டில் அவர் பேசியது:

மத்திய மாநில அரசுகள் விவசாய விரோதக் கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றன. மத்திய அரசின் உணவுத் தானியங்கள் மீதான மானியம் ரூ.424 கோடி குறைத்துள்ளது. உரம் மீதான மானியத்தையும் குறைத்துவிட்டது. இதனால் உரத்தின் விலை 10 சதவீதம் உயர்ந்து விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிராப்புற மேம்பாட்டுக்காக மத்திய அரசு கடந்த ஆண்டு வழங்கிய 21.06 சதவீத முதலீட்டை இந்த ஆண்டு 16.18 சதவீதமாகக் குறைத்துவிட்டது.

சுவாமிநாதன் கமிஷன் விவசாயிகளுக்கு 4 சதவிகித வட்டியில் கடன் வழங்க வேண்டும் என கூறியதை மத்திய அரசு புறக்கணித்து, பன்னாட்டு நிறுவனங்களுக்கு வரிச் சலுகையாக ரூ.26 ஆயிரம் கோடி வழங்கி வருகிறது என்றார் அவர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் பேசியது:

விவசாயிகளிடம் இருந்து 75 ஆயிரம் ஏக்கர் நிலத்தை பறித்து பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கியது குறித்து தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

தொழிற்சாலைகளை அமைப்பதற்காக விவசாய நிலங்கள் பறிக்கப்படுகின்றன. சுதந்திரம் பெற்ற போது இந்திய மக்கள்தொகை 30 கோடியாக இருந்தது.

தற்போது அது 110 கோடியாக உயர்ந்துவிட்டது. மக்கள் தொகை பெருகி வருகிறது. ஆனால் விளை நிலங்களின் பரப்பரளவு குறைந்து வருகிறது.

எனவே தொழிற்சாலைகளுக்கு விளை நிலங்களை கையகப்படுத்துவதை தடுக்க வேண்டும் என்றார் அவர்.

தேசிய கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர்.நல்லக்கண்ணு, எம்எல்ஏக்கள் டி.ராமச்சந்திரன், குணசேகரன், விவசாயிகள் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் துரைமாணிக்கம், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.லகுமைய்யா உள்ளிட்டோர் பேசினர்.

**பிஏபி பாசன விவசாயிகளுக்கு  நஷ்ட ஈடு வழங்க கோரிக்கை**

First Published : 12 Apr 2010 06:25:22 AM IST

உடுமலை, ஏப். 11:  பிஏபி. முதல் மண்டல பாசனத்தில் நஷ்டமடைந்துள்ள விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று, கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், உடுமலை பாலாஜி திருமண மண்டபத்தில் புதன்கி ழமை நடைபெற்றது. ஜோத்தம்பட்டி பாசன சபை தலைவர் பழனிசாமி தலைமை வகித்தார். மருள்பட்டி பாசன சபை தலைவர் பாலதண்டபாணி, நரசிங்காபுரம் பாசன சபைத் தலைவர் பாலசுப்பிரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

ஜன. 22-ம் தேதி முதல் மண்டல பாசனத்துக்கு தண்ணீர் விடப்பட்டது. இந்த தண்ணீரை நம்பி உடுமலை, மடத்துக்கு ளம், பல்லடம், காங்கயம், திருப்பூர் வட்டங்களில் உள்ள விவசாயிகள் மக்காச்சோளம், வெங்காயம் உள்ளிட்ட பயிர் களை சாகுபடி செய்தனர். கடந்த மூன்று மாதங்களில் ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் முதல் ரூ. 25 ஆயிரம் வரை செலவுகளும் செய்துள்ளனர்.

இந்நிலையில் பிஏபி நிர்வாகம் பொறுப்பற்ற முறையில் நீர் நிர்வாகம் செய்து வந்ததாலும், காண்டூர் கால்வாய் உடைந்து திருமூர்த்தி அணைக்கு உரிய நேரத்தில் தண்ணீர் வந்து சேராததாலும், பாசனப் பகுதிகளில் உள்ள பயிர்கள் காய்ந்து வருகின்றன. இதனால் ஏற்பட்டுள்ள நஷ்டத்துக்கு தமிழக அரசு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும். விவசாயிகள் பெற்றுள்ள கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். ஆனைமலை நல்லாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

காண்டூர் கால்வாயை சீரமைக்க தமிழக அரசு ஒதுக்கியுள்ள நிதியில் முறைகேடு இன்றி பணிகள் நடைபெற விவசாய சங்க தலைவர்கள், பாசன சங்க தலைவர்கள் அடங்கிய குழுக்களை அமைக்க வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியு றுத்தி, ஏப். 12-ம் தேதி காலை 10 மணிக்கு உடுமலை பிஏபி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.மதுசூதனன், கிளுவங் காட்டூர் பாசன சபை தலைவர் ராஜசேகர், கண்ணம நாயக்கனூர் பாசன சபை தலைவர் செல்வராஜ் உள்ளிட்ட 200-க்கு மேற்பட்ட சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் சங்கம் புதிய நிர்வாகிகள் தேர்வு**

First Published : 12 Apr 2010 06:24:23 AM IST

திருப்பூர், ஏப். 11: திருப்பூரில் நடந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட மாநாட்டில், புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப் பட்டனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட மாநாடு, நிர்வாகி ஏ.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடந்தது. மாநாட்டில் விவ சாயிகள் சங்கக் கொடியை நிர்வாகி பல்லடம் ராதாகிருஷ்ணன் ஏற்றி வைத்தார்.

மாநாட்டை இந்திய கம்யூ., மாவட்ட செயலர் எம்.ரவி துவக்கிவைத்து இன்றைய அரசியல் நிலை குறித்தும் விவசாயிக ளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்தும் விளக்கமளித்தார். சங்கத்தின் மாவட்ட செயலர் கே.சி.ராதாகிருஷ்ணன் வேலைஅறிக்கையை வாசித்தார்.

ஏஐடியூசி மாவட்டத் தலைவர் சி.பழனிச்சாமி, சங்க மாவட்ட செயலர் வி.பி.பழனிச் சாமி, மாதர் சங்க மாவட்டத்தலைவர் ஏ.ஜெயலட்சுமி ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினர். மாநாட்டில் 21 பேர் கொண்ட மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட் டது. அதன்படி, தலைவராக கே.சி.ராதாகிருஷ்ணன், துணைத் தலைவர்களாக எஸ்.சின்னசாமி, பி.சின்னதுரை, செயல ராக ஏ.பாலசுப்பிரமணியம், துணைச்செயலர்களாக எம்.செல்வராஜ், கே.சின்னசாமி, பொருளாளராக சி.ராமசாமி உள் ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் குழு தேர்வு செய்யப்பட்டனர்.

**கரும்பு அரவை குறைந்ததால் மின்உற்பத்தி குறைந்த கூட்டுறவு சர்க்கரை**

First Published : 12 Apr 2010 02:54:35 AM IST



சிதம்பரம், ஏப். 11: நிர்வாகத் திறமையின்மை, அரசியல் குறுக்கீடுகள், கரும்புக்கு உரிய விலை கிடைக்காதது ஆகியவற்றால் தமிழகத்திலேயே அதிக லாபத்தில் இயங்கி வந்த சிதம்பரத்தை அடுத்த சேத்தியாத்தோப்பில் உள்ள எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு அரவை குறைந்து நஷ்டத்தில் இயங்கி வருகிறது. மேலும் அரவை குறைந்ததால் மின்உற்பத்தியும் குறைந்துள்ளது என விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

÷விவசாயத்தை தொழிலாக நம்பியுள்ள இப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் முன்னாள் அதிமுக அமைச்சர் வி.வி.சுவாமிநாதன் முயற்சியால், சிதம்பரத்தை அடுத்த சேத்தியாத்தோப்பில் 1989-ல் எம்.ஆர்.கே.கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கப்பட்டது. ஆலை தொடங்கப்பட்டது முதல் 2.50 லட்சம் டன் முதல் அரவை தொடங்கி சுமார் 6 லட்சம் டன் வரை அரவை நடைபெற்று தமிழகத்தில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலேயே அதிக லாபத்தில் இச்சர்க்கரை ஆலை இயங்கி வந்தது.

மேலும் சர்க்கரை ஆலை கழிவிலிருந்து மின்உற்பத்தி செய்யும் திட்டம் இச்சர்க்கரை ஆலையில்தான் முதன்முதலாக தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

5 ஆண்டுகளாக தலைமை கரும்பு அலுவலர் மற்றும் கரும்பு அலுவலர்களால் விவசாயிகளுக்கு கரும்பு வெட்டுவதற்கு உத்தரவு வழங்குவதில் ஏற்பட்ட முறைகேடுகளால் கரும்பு விவசாயிகள் மிகவும் அவதியுற்று கரும்பு விவசாயத்தையே பெரும்பாலான விவசாயிகள் நிறுத்தி விட்டனர்.

கரும்பு அலுவலர்கள் சரியாக வெட்டு உத்தரவு வழங்காததால் வெறுத்துபோன பல விவசாயிகள் தங்களது கரும்பு தோட்டத்தை தீயிட்டு கொளுத்திய சம்பவமும் நடைபெற்றுள்ளது.

கொஞ்சம், நஞ்சம் பயிரிட்ட கரும்பு விவசாயிகள் தங்களது கரும்புகளை அருகாமையில் உள்ள ஆண்டிமடம் தனியார் சர்க்கரை ஆலைக்கு கூடுதல் விலைக்கு அளித்து வந்தனர்.

÷இந்நிலையில் 2009-10 ஆண்டு கரும்பு அரவைக்கு குறைந்தபட்சம் 2.50 லட்சம் டன் கரும்பு இருந்தால்தான் அரவை நடைபெறும் என்ற நிலைமை உருவானது. பின்னர் மாவட்ட ஆட்சியர் பெ.சீதாராமன் தலையீட்டின் பேரில் அருகே உள்ள ஆண்டிமடத்திலிருந்து கரும்பு பெறப்பட்டு தற்போது 2 லட்சம் டன் கரும்பு சேகரிக்கப்பட்டு அரவை தொடங்கியுள்ளது.

6 லட்சம் டன் கரும்பு அரவை நடைபெற்ற இச்சர்க்கரை ஆலையில் மின்சாரம் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டது. தற்போது அரவை குறைந்ததால் மின் உற்பத்தியும் குறைந்துள்ளது.

÷அதிகாரிகளின் நிர்வாக திறமையின்மை, அரசியல் தலையீடுகள் மற்றும் கரும்புக்கு உரிய விலை கிடைக்காதது ஆகியவற்றால் அதிக லாபத்தில் இயங்கி கொண்டிருந்த சேத்தியாத்தோப்பு கூட்டுறவு சர்க்கரை ஆலை நஷ்டத்தில் இயங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என கரும்பு விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

÷இச்சர்க்கரை ஆலையை மீண்டும் லாபத்தில் இயங்க வைக்க திறமையான அதிகாரியை நியமித்து இப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரமாக திகழும் சர்க்கரை ஆலையை மீண்டும் லாபத்தில் இயங்க வைக்க தமிழக அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இல்லையெனில் எதிர்காலத்தில் இச்சர்க்கரை ஆலையை மூடவேண்டிய நிலை ஏற்படும் என உழவர் கூட்டமைப்புத் தலைவர் பி.ரவீந்திரன் தெரிவித்தார்.

**வேளாண்மை இயந்திரங்கள் விற்பனையில் திருச்செங்கோடு கூட்டுறவு சங்கம் சாதனை**

First Published : 11 Apr 2010 10:34:45 AM IST

Last Updated : 12 Apr 2010 09:20:30 AM IST

திருச்செங்கோடு, ஏப்.8: இரண்டே மாதங்களில் தமிழகத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு வேளாண் இயந்திரங்களை ரூ 50.66 லட்சத்திற்கு விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் நடத்தும் வேளாண் சேவை மையங்கள், சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் இயந்திரங்களான மினி டிராக்டர், பவர் டில்லர், பவர் தெளிப்பான், கோனோவீடர், நெல் அறுவடை இயந்திரத்தைப் பெற்று வாடகைக்கு விடுகின்றன.

தென்கிழக்கு ஆசியாவிலேயே பெரிய கூட்டுறவு விற்பனைச் சங்கமான திருச்செங்கோடு சஙகத்தில் 49 ஆயிரத்து 850 உறுப்பினர்கள் உள்ளனர். விவசாயிகளின் விளைபொருட்களை ஏலம் மூலம் நல்ல விலைக்கு விற்று உடனடியாகப் பணத்தை பட்டுவாடா செய்து வருகிறது இச்சங்கம். 2009-10ல் பருத்தி, எள், கடலைப்பருப்பு, ஆமணக்கு, தேங்காய் பருப்பு, சூரியகாந்தி விதை, மக்காச்சோளத்தை ரூ.72.11 கோடிக்கு விற்று சாதனை படைத்துள்ளது. இது, சென்ற ஆண்டை விட ரூ.45.40 லட்சம் கூடுதலாகும். ஓராண்டு விற்பனையான விளைபொருட்கள் 23 ஆயிரத்து 118 மெட்ரிக் டன்.

சங்கத்தின் தலைமையகம் உள்ள உள்ள திருச்செங்கோட்டிலும், கிளை அலுவலகங்கள் உள்ள மல்லசமுத்திரம், கொங்கணாபுரம் ஆகிய இடங்களிலும் பொதுமக்களுக்குத் தேவையான வீட்டு உபயோகப் பொருட்கள், எழுதுபொருட்கள், அழகு சாதனப்பொருட்கள், மின்சாதனங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பல்வேறு விற்பனை மூலம் ரூ.212. 41 கோடிக்கு இச்சங்கம் வணிகம் செய்துள்ளது. கடந்த ஆண்டை விட இது ரூ.20.91 கோடி அதிகம். மருந்துகளை ரூ.14.56 லட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது. கடந்த ஆண்டில் ரூ.53.86 கோடிக்கு நகைக்கடன் வழங்கியுள்ளது.

தினமலர்

**இயற்கை வளம் ஆராய விரைவில் முயற்சி மயில்சாமி அண்ணாதுரை தகவல்**

பெரம்பலூர்: "இயற்கை வளம் குறித்து ஆராய்வதற்காக விரைவில் முயற்சி மேற்கொள்ளப்படும்," என 'சந்திராயன் 2' திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை தெரிவித்தார். பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனத்தில் நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டி:

நிலவுக்கு அனுப்பிய 'சந்திராயன் 1' செயற்கைகோள் வடதுருவம் குறித்த நிலைகள் குறித்து ஆராய்ந்தது. தென்துருவம் குறித்த ஆராய்ச்சி விரைவில் நடைபெற உள்ளது. 'சந்திராயன் 2' இந்தியா, ரஷ்யா தொழிற்நுட்ப கூட்டு முயற்சியில் தொடங்கப்பட உள்ளது. இந்தாண்டு இதற்கான ஆரம்ப கட்ட பணிகள் நடைபெறும்.

வரும் 2011-2012ல் பணிகள் முடிவடைந்து பரிசோதனை முயற்சி மேற்கொள்ளப்படும். 2013ல் திட்டம் செயல்படுத்தப்படும். தமிழக முதல்வரின் வேண்டுகோளுக்கு இணங்க செம்மொழி மாநாட்டில் 'அறிவியல் தமிழ்' என்ற தலைப்பில் செம்மொழி மாநாட்டில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கிறேன்.

தெரியாத மொழியில் சிந்திப்பது கடினம். தாய்மொழியில் எதையும் சிந்திக்கலாம். மனிதனுக்கு ஒரு வயது முதல் 16 வயது வரை மட்டுமே அறிவு வளருகிறது. கிராமங்களில் ஆங்கில வழி கல்வியையே விரும்புகின்றனர். இது தவறான அபிப்ராயம். பிரமோஷ் ஏவுகனைக்கு வித்திட்ட சிவதாணுபிள்ளை, அணு ஆயுத சோதனைக்கு வித்திட்ட அப்துல்கலாம் என விவசாயத்திலிருந்து விண்வெளி வரை சாதித்துள்ளனர். அவர்கள் தாய்மொழியிலேயே சிந்தித்துள்ளனர். உலகம் வெப்பமயமாகுதல் குறித்து விழிப்புணர்வு மக்களிடம் ஏற்பட வேண்டும். மாதம் ஒரு ராக்கெட் செலுத்தினால் பூமிக்கு ஆபத்து ஏற்படும்.

விரைவில் இயற்கை வளம் குறித்து ஆராய்வதற்காக முயற்சி மேற்கொள்ளப்படும். நிலவில் 100 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து சந்திராயன் மூலம் 11 சாதனங்களை கொண்டு 16 முறையில் நிலவு ஆராயப்பட்டது. இதுவரை ஒரு

சதவீதம் ஃபோட்டோ எடுக்கும் பணிதான் நடந்துள்ளது. இதற்காக 400 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. சந்திராயன் 1ன் செயல்பாடு ஏழு சர்வதேச நாடுகளுக்கு காட்டப்பட்டது. இந்தியாவில் மாநில அளவில் நிலபரப்புகளை ஆராய பிராந்திய தொலைஉணர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மயில்சாமி அண்ணாதுரை கூறினார்.

**வேளாண் திட்டங்கள் அனைத்தும் ஒன்றிணைப்பு : நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை என மாற்றம்**

ராமநாதபுரம் : வேளாண் சார்ந்த திட்டங்கள் அனைத்தும் ஒன்றிணைத்து, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை என செயல்பட உள்ளது.

விவசாயத்தை மேம்படுத்தும் விதமாக பல்வேறு துறைகளின் சார்பில் நிறைய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டம், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டம், வேளாண் இணை இயக்குனர் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய மானாவரி நீர்பிடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் (நவப்ரா), ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் போன்றவை விவசாயிகளுக்கு நடைமுறையில் உள்ளன. இவற்றில் பல திட்டங்களில் பல பாதங்களும் இருந்து வருகிறது. இவற்றை களையும் வகையில், அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்பட முடிவு செய்யப்பட்டது.

கடந்த 2008-09ன் நிதிநிலை அறிக்கையில் இது குறித்து அத்துறை அமைச்சரும் அறிவித்திருந்தார். தற்போது அது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை என பெயரிடப்பட்டுள்ள இந்த திட்டமானது, கடந்த ஏப்.,1 முதல் செயல்பட தொடங்கியுள்ளது. கலெக்டர் ஹரிஹரன் இந்த முகமையின் தலைவராகவும், வேளாண் இணை இயக்குனர் சத்தியமூர்த்தி திட்ட அலுவலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திட்ட அலுவலர் கூறியதாவது: மண்வளத்தை பாதுகாத்து நிலத்தடி நீர் வளத்தினை உயர்த்துதல், புதிய வேளாண் தொழில் நுட்பம் மூலம் தரிசு மற்றும் மானாவரி நிலங்களை விளைநிலமாக மாற்றுவது, மழை நீரை முழுமையாக சேமித்து வளத்தினை பெருக்குதல், மரம் வளர்த்து வனச்சீரழிவை தடுப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், என்றார்.

இது குறித்து நடந்த விளக்க கூட்டத்தில் வேளாண் துணை இயக்குனர் சக்திமோகன், திட்ட பொருளாளர் அனந்தகிருஷ்ணன், வேளாண் அலுவலர் சேக் தாவுது, செயற்பொறியாளர் அழகர்சாமி, நிர்வாக அலுவலர் மனோகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

**ஸ்வேதா நதி பாசன விவசாயிகளுக்கு மானியம்**

பனமரத்துப்பட்டி: 'சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையம் மூலம் நீர்வள நிலவளத்திட்டத்தில், ஸ்வேதா நதி பாசன விவசாயிகளுக்கு மானிய உதவிகள் வழங்கப்படுகிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார். இது குறித்து சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம் வெளிட்ட அறிக்கை:

தமிழ்நாடு வேளாண் பல்கலை, சேலம் சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையம் மூலம் சேலம், நாமக்கல் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் நீர்வள நிலவள திட்டத்தில் பல்வேறு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, துல்லிய பண்ணைய முறையில் 50 ஹெக்டேரில் வாழை, 40 ஹெக்டேரில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ், ஸ்வேதா நதி பாசன விவசாயிகளுக்கு மானிய உதவிகள் வழங்கப்படுகிறது. மஞ்சள் சாகுபடிக்கு யூரியா, சூப்பர் பாஸ்பேட் மற்றும் நீரில் கரையும் தன்மை கொண்ட உரங்கள் வழங்கப்படுகிறது.

சொட்டு நீர் பாசனம் அமைத்து தரும் நிறுவனத்திற்கு, சொட்டுநீர் குழாய்கள், உரத்தொட்டிக்கான தொகையில், 65 சதவீதம் அரசு மானியமாக வழங்கப்படும். மீதி தொகையை விவசாயிகள் செலுத்த வேண்டும். விவசாயிகள் செலுத்தும் தொகைக்கு இடுபொருட்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் உள்ள தலைவாசல், ஆத்தூர்,

கெங்கவல்லி, தம்மம்பட்டி மற்றும் நாமக்கல் மாவட்ட விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம். ஸ்வேதா நதி பாசன பகுதி விவசாயிகள், சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தை தொடர்பு கொண்டு தேவையான விபரங்களை பெறலாம்.

**உத்தமபாளையம் பகுதி வாழையில் தண்டு துளைப்பான் பூச்சி தாக்குதல்**

தேனி : உத்தமபாளையம் பகுதியில் சாகுபடி செய்யப்பட் டுள்ள வாழை மரங்களில் தண்டுதுளைப்பான் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது.

இதனை கட்டுப்படுத்த வாழை மரத்தின் காய்ந்த இலைகளையும், இலைப் பட்டைகளையும் அவ்வப் போது மரத்தில் இருந்து நீக்கி, அவற்றை அழித்து வாழை மரத்தின் தண்டுப்பகுதியை மிகவும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். 30 நாட்களுக்கு ஒருமுறை பக்க கன்றுகளை நீக்க வேண்டும். மறுதாம்பு விடும் போது தண்டு துளைப்பான் தாக்கிய பகுதிவரை தாய் மரத்தை முற்றிலுமாக அழித்து விட வேண்டும்.

பெண் வண்டானது மரத்தில் முட்டையிடாமல் ஆரம்பத்திலேயே தடுப்பதற்கு குளோரிபைரிபாஸ், 20 இ.சி., மருந்தை 2.5 மில்லி குளோரிபைரிபாஸ் மருந்துடன், ஒரு மில்லி ஒட்டுந்திரவத்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து இந்த மருந்து கலவையை வாழைமரத்தண்டில் பிரஷ் கொண்டு நன்றாக பூச வேண்டும். வாழைத்தண்டு கவர்ச்சிபொறி வைத்தும் அழிக்கலாம்.

தண்டுதுளைப்பான் தாக்கம் அதிகம் இருந்தால் நட்ட ஐந்து மாதத்தில் இருந்து எட்டு மாதங்கள் வரை மாதம் ஒருமுறை மானோகுரோட்டபாஸ் மருந்தை ஊசி மூலம் தண்டினுள் செலுத்தி கட்டுப்படுத்தலாம் என விவசாயத்துறை ஆலோசனை வழங்கி உள்ளது.

**விவசாயிகளுக்கு மானியம்**

வருஷநாடு ; கடமலைக்குண்டு வேளாண்மை துறை மூலமாக கொட்டைமுந்திரி, நெல், காய்கறி மற்றும் பயறு வகைகளுக்கு மருந்து தொளிக்க 2000 ரூபாய் மானியத்தில் விசைத்தொளிப்பானும், 800 ரூபாய் மானியத்தில் கைத்தொளிப்பானும், 800 ரூபாய் மானியத்தில் தள்ளூ பம்புகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. தேவைப்படும் விவசாயிகள் கடமலைக்குண்டு வேளாண்மை அலுவலகத்தினை தொடர்ப்பு கொள்ளுமாறு துணை உதவி இயக்குனர் திலகர் தெரிவித்துள்ளார்.

**வாத்து வடிவில் பப்பாளிகாய்**

கோவில்பட்டி:கோவில்பட்டி அருகே உள்ள கிராமத்தில் விவசாயி வீட்டு தோட்டத்து பப்பாளி மரத்தில் வாத்து வடிவத்தில் காய்த்துள்ள அதிசய பப்பாளியை அப்பகுதி மக்கள் ஆர்வத்துடன் பார்த்து செல்கின்றனர்.கோவில்பட்டி அருகே உள்ள எட்டயபுரம் தாலுகாவிற்குட்பட்ட அயன் வடமலாபுரத்தை சேர்ந்த வரதராஜன் இவர் விவசாயம் செய்து வருகிறார். இவர் தன் வீட்டிற்கு முன்பு இரண்டு பப்பாளி மரங்களை வளர்த்து வந்துள்ளார். இதில் ஒரு மரத்தில் குலையாக காய்த்து தொங்கிய பப்பாளியில் ஒன்று மட்டும் வாத்து வடிவத்தில் காய்த்துள்ளது. மற்ற பப்பாளிகள் எல்லாம் உருண்டையாகவும், நீள் வடிவத்திலும் காய்த்துள்ள போது இந்த ஒரு பப்பாளி மட்டும் வாத்து வடிவத்தில் காய்த்ததுள்ளது கண்டு அப்பகுதி மக்கள் அதிசயத்துடன் பார்த்து செல்கின்றனர்.

**விதை கிராம திட்ட பயிற்சி முகாம்**

துறையூர்:தா.பேட்டையை அடுத்த பிள்ளாபாளையம் ஊராட்சி முத்துராஜா பாளையம் கிராமத்தில் சிறு தானியம் விதை கிராம பயிற்சி முகாம் நடந்தது.முகாமிற்கு ஊராட்சித் தலைவர் அரங்கராஜன் தலைமை வகித்தார்.வேளாண் உதவி

இயக்குனர் சவுந்தரம், கம்பு பயிரில் விதை உற்பத்தி தொழில் நுட்பங்களை பற்றியும், விதை நேர்த்தி, உரமிடல், பயிர் பாதுகாப்பு, விதை சேகரிப்பு பற்றியும் விளக்கி கூறினார்.

மேலும் ஒவ்வொரு விவசாயியும் ஒவ்வொரு ஆண்டும் பயிர் சாகுபடி குறிப்புகளையும், அதற்கான செலவு விபரங்களையும், நிகர வருமானத்தையும் ஒரு பதிவேட்டில் பதிவு செய்து ஆண்டு நிகர வருமானம் அதிகரிக்கும் வகையில் திட்டமிட்டு பயிர் சாகுபடி செய்ய வேண்டும் என விவசாயிகளை கேட்டுகொண்டார்.

வேளாண் அலுவலர் ரவிச்சந்திரன், மண்மாதிரி எடுத்தல், மண்மாதிரி பயன், விதை கிராமத்தின் நோக்கம், விதை சான்று நடைமுறைகள் பற்றி விளக்கம் அளித்தார். முகாமில் முத்துராஜபாளையம், பிள்ளாபாளையம், இலுப்பூர், அமராவதிசாலை, லட்சுமாபுரம், ஆகிய பகுதிகளை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.முன்னதாக துணை வேளாண் அலுவலர் அழகர்சாமி வரவேற்றார். முடிவில் வேளாண் உதவி அலுவலர் ரேவதி நன்றி கூறினார்.

**மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி முகாம்**

மண்ணச்சநல்லூர்:மண்ணச்சநல்லூரில் மண்புழு உர தயாரிப்பு பயிற்சி முகாம் நடந்தது.,வேளாண் உதவி இயக்குநர் (பொ) ரெய்கார் தலைமை வகித்தார். மண்புழு உரத்தின் அவசியம், மண்ணின் தன்மை, செயலாக்கம், மண்வளம் பெருகவும், விவசாயிகளின் வருமானத்தை பெருக்கவும் மண்புழு உரத்தின் அவசியம் குறித்து பேசினார்.

மண்புழு உரம் தயாரிப்பு தொட்டி அமைக்க ஒரு ஏக்கருக்கு ரூ. 32 ஆயிரத்து 500 மானியம் என மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் 4 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு 14 விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட உள்ளது என துணை மேலாண்மை அலுவலர் மனோகரன் கூறினார். முகாம் ஏற்பாடுகளை ஜீவானந்தம், லட்சுமணன், துரைசங்கர், மனோகர், பாஸ்கர் ஆகியோர் செய்திருந்தனர்.

**பால் உற்பத்தியில் சிறப்பிடம்:கயத்தாறு சங்கத்திற்கு சான்றிதழ்: கலெக்டர் ஜெயராமன் வழங்கல்**

திருநெல்வேலி;பால் உற்பத்தியில் சிறந்து விளங்கிய கயத்தாறு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச்சங்கத்திற்கு கலெக்டர் ஜெயராமன் சான்றிதழ் வழங்கினார்.நெல்லை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்கப்பட்ட பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச்சங்கங்களில் 2008-2009ல் பால் உற்பத்தியில் சிறந்து விளங்கிய சங்கங்களுக்கு பால்வளத்துறை சார்பில் பரிசு வழங்கும் விழா நெல்லை ஆவின் வளாகத்தில் நடந்தது.

நாள் ஒன்றுக்கு 2,500 லிட்டருக்கு மேல் பால் உற்பத்தி செய்து முதலிடம் பெற்ற கயத்தாறு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச்சங்கம், நாள் ஒன்றுக்கு 510 முதல் 2,500 லிட்டர் வரை பால் உற்பத்தி செய்த அம்பலவாணபுரம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கம், நாள் ஒன்றுக்கு 500 லிட்டருக்குள் அதிகப்பட்சமாக பால் உற்பத்தி செய்த மேல இலந்தைக்குளம் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் பரிசு, சான்றிதழ் வழங்கப்பட்டது. கலெக்டர் ஜெயராமன் வழங்கினார். சங்க செயலாளர்கள் சுப்புலட்சுமி, பொன் விக்சன், வில்சன் பெற்றுக்கொண்டனர்.துணைப்பதிவாளர் (பால்பதம்) முத்துக்கிருஷ்ணன், ஆவின் பொது மேலாளர் டாக்டர் சேகர், ஒன்றிய அலுவலர்கள், பணியாளர்கள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

**பூச்சிமருந்து, உரம் விற்கும் கடைகளுக்கு வேளாண் பட்டதாரிகளுக்கே 'லைசன்ஸ்' குறைதீர்வு கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை**

தண்டராம்பட்டு:தண்டராம்பட்டில் நடந்த விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், விவசாய மருந்து பொருட்களான பூச்சிமருந்து, உரம் போன்றவை விற்கும் கடைகளுக்கு வேளாண் துறை பட்டப்படிப்பு படித்தவர்களுக்கே லைசன்ஸ் தர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

தண்டராம்பட்டு புதிய தாலுகா அலுவலகத்தில், முதலாவது விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு, துணை கலெக்டர் (டி.வி. பிரிவு) மீனாட்சிசுந்தரம் தலைமை வகித்தார். சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் நடராஜன் முன்னிலை வகித்தார். தாசில்தார் ஸ்ரீதர் வரவேற்றார்.

கூட்டத்தில், நாராயணகுப்பம் வெங்கிடகிருஷ்ணன், ராயண்டபுரம் தட்சிணாமூர்த்தி, சின்னியம்பேட்டை ஆனந்தன், செல்வம், மேல்கரிப்பூர் ராஜேந்திரன், பழனிவேல், தரடாபட்டு மனோகர், காசி, கீழ்வேலூர் ராஜாராம், மலையனூர்செக்கடி திருப்பதி, தானிப்பாடி அருண்குமார், தண்டராம்பட்டு ஜெயதேவ் உள்ளிட்ட 50க்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அரசுத்துறை சார்பில் தீயணைப்பு, பொதுப்பணித்துறை போன்றவை சார்பில் அலுவலர்கள் கலந்து கொண்டனர். அதேநேரத்தில் பி.டி.ஓ., மின்சாரம், கூட்டுறவு, கல்வி, போக்குவரத்து ஆகிய துறைகள் சார்பில் யாரும் கலந்து கொள்ளவில்லை.

கடந்த மாத கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை வைத்த தானியங்கி வானிலை மையம் குறித்து கேட்டதற்கு, வாழவச்சனூரில் இயங்கிவரும் மையம் எவ்வாறு செயல்படுகிறது என விவசாயிகளை அழைத்துச்சென்று காண்பிக்கப்படும் என பதில் அளிக்கப்பட்டது. மேலும், விதை ஆய்வு மையம் கட்டப்பட்டுள்ளது என்றும், உர ஆய்வு மற்றும் தர பரிசோதனை மையம் அமைக்க கருத்துரு அனுப்பப்பட உள்ளது.

விதைக்கிடங்கு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. வேளாண் தேசிய காப்பீடு திட்டம் விரைவில் நடத்தப்படும். 2008-09ல் சிறிய தடுப்பணைகள்-3, பெரிய தடுப்பணைகள்-3, பண்ணை குட்டைகள்-3, செயல்திறன் வழி மழைநீர் சேகரித்தல் 4ம் கட்டப்பட்டுள்ளது. 2009-10ம் ஆண்டுக்கு சிறிய தடுப்பணை-4, நடுத்தர தடுப்பணை-3, பெரிய தடுப்பணை-2, பண்ணை குட்டை-2, செயல்திறன் வழி மழைநீர் சேகரித்தல் 2ம் கட்டப்பட்டுள்ளதாக வேளாண்மை பொறியியல் துறையினர் தெரிவித்தனர்.

அதோடு, மேல்கரிப்பூர் நியாயவிலை கடை குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காஸ் ஏஜென்சி குறித்து முத்தரப்பு கூட்டம் நடத்தி காஸ் சிலிண்டர் நுகர்வோருக்கு விரைவில் கிடைத்திட நடவடிக்கை எடுக்கப்படும். மின் பற்றாக்குறை தீர்க்க பஞ்., தலைவர் கூட்டத்தை உதவி கோட்ட மின் பொறியாளர் கூட்டி, தேவையான வசதிகள் செய்து தரப்படும் என்றும், ஏரி ஆக்கிரமிப்புகள் அடுத்த கூட்டத்துக்குள் அகற்றப்படும் என்றும் விவசாயிகளின் கோரிக்கைகள் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் விவசாயிகள் பேசுகையில், தண்டராம்பட்டு தாலுகாவுக்கு புதிதாக சொந்த கட்டடம் தந்ததற்காக முதல்வர் கருணாநிதி மற்றும் அமைச்சர் எ.வ.வேலு ஆகியோருக்கு நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்தனர். மேலும், இப்போது வழங்கப்படும் மின்சார அளவை கூடுதலாக 11 மணி நேரம் தர ஏற்பாடு செய்ய வேண்டும்.

தண்டராம்பட்டுக்கு என தனியாக காஸ் ஏஜன்சி தர வேண்டும். விவசாய மருந்து பொருட்களான பூச்சிமருந்து, உரம் போன்றவை விற்கும் கடைகளுக்கு விவசாயத்துறை தொடர்பான பட்டப்படிப்பு படித்தவர்களுக்கே லைசன்ஸ் தர வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

**ஆடு வளர்ப்பு இலவச பயிற்சி**

திருவாரூர்: விளமல் உழவர் பயிற்சி மையத்தில் வரும் 15, 16ம் தேதிகளில் ஆடு வளர்ப்பு பற்றிய இலவச பயிற்சி நடக்க உள்ளது.இதுகுறித்து பயிற்சி மைய இணை பேராசிரியர் முருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:திருவாரூர் விளமலில் இயங்கி வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உழவர் பயிற்சி மையத்தில் வரும் 15, 16ம் தேதிகளில் இலவச ஆடு வளர்ப்பு பற்றிய பயிற்சி நடக்கிறது. இதில் இடத்தேர்வு, கொட்டகை அமைப்பு, வளர்ப்பு முறைகள், தீவனப்பராமரிப்பு, நோய்த்தடுப்பு மற்றும் பண்ணை பொருளாதாரம் போன்ற தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படும்.பயிற்சியில் கலந்து கொண்டு பயன்பெற விரும்புவோர் உழவர் பயிற்சி மையத்தில் பயிற்சி நாளன்று காலை 10 மணிக்கு சென்று பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விபரம் பெற நேரிலும்அணுகலாம்.

**பயிர் காக்கும் மருந்திலும் காலாவதி: திருப்பத்தூர் ஆலையில் அலட்சியம்: விவசாயிகள் அதிர்ச்சி**

வாணியம்பாடி:உயிர் காக்கும் மருந்தில் போலியும், காலாவதி மருந்தும் இருப்பது போல் பயிர் காக்கும் மருந்திலும் காலாவதியான களைக்கொல்லி மருந்து விற்பனை செய்யப் படுவது விவசாயிகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் போலி மருந்துகள் விற்பனை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக 46 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வாணியம்பாடி பகுதியில் விவசாய களைக்கொல்லி மருந்து காலாவதி யானது விற்பனை செய்யப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வாணியம்பாடி அடுத்த திம்மாம்பேட்டை பகுதியை சேர்ந்தவர் விவசாயி சுப்பிரமணி பிரசாத். இவர் திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உறுப்பினராக உள்ளார். கடந்த 10ம் தேதி கரும்புக்கு தேவையான களைக்கொல்லி மருந்தை ஒரு கிலோ மானிய விலையில் வாங்கியுள்ளார்.

அரை கிலோ பாக்கெட்டில் ஒரு ஆண்டு முடிந்த நிலையில் காலாவதியான களைக் கொல்லி மருந்து விற்பனை செய்வதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.ஏற்கனவே நொந்து நூலாகியிருக்கும் கரும்பு விவசாயிகளை ஏமாற்றி அலுவலர்கள் இது போன்ற காலாவதியான மருந்தை விற்பனை செய்வதா? என்றும், போலி மருந்தும் காலாவதியான மருந்தும் விற்பனை என்பது உயிர் காக்கும் மருத்துவத் துறைக்கு மட்டுமா? பயிர் காக்கும் வேளாண் துறையிலும் மோசடி இருப்பதை தமிழக அரசு கண்டு கொள்ளுமா? என்று விவசாயிகளிடையே கேள்வி எழுந்துள்ளது.

இது குறித்து விவசாயி சுப்பிரமணி பிரசாத் கூறியதாவது: கடந்த 10ம் தேதி கரும்புக்கு தேவையான களைக் கொல்லி மருந்தை மானிய விலையில் வாங்க ஆலைக்கு சென்றேன். அப்போது ஒரு ஆண்டு முடிந்த நிலையில் அரை கிலோ பாக்கெட்டில் காலாவதியான களைக்கொல்லி மருந்து விற்கப்பட்டது.இதைப்பற்றி அங்குள்ள அதிகாரியிடம் விசாரித்தேன். ஒரு மூடிக்கு இரண்டாக சேர்த்து தெளித்தால் சரியாகி விடும் என்று பதில் கூறுகின்றனர்.

காலாவதியான களைக் கொல்லி மருந்து விற்பனையை தனி அலுவலருக்கு தெரிவிக்காமல் இது போன்று விற்பனை செய்யும் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கரும்பு பகுதியில் மழையின்றி பதிவு பாதித்திருக்கும் நிலையிலும் விவசாயிகள் தேடி வந்து அலுவலகத்தில் விதைக்கரும்பு கேட்டாலும் ஏற்பாடு செய்வதற்கு நிர்வாகத்தால் முடியவில்லை.

காலாவதியான மருந்து விற்பனையால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளோம். இதனை தடுக்க தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**விளைச்சல் மிகக்குறைவு மாம்பழம் விலை உயர்வு**

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவி.,யில் விளைச்சல் மிகவும் குறைவால், மாம்பழம் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. செண்பகதோப்பு, மம்சாபுரம், வத்திராயிருப்பு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் சப்பட்டை, பஞ்சவர்ணம் ரக மாம்பழங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்தாண்டு சரிவர மழை பெய்யாததால் டிசம் பரில் பூக்க வேண்டிய மா பூக்கள் ஜனவரி, பிப்ரவரியில் தான் பூத்தன. காய்கள் விளையும் முன்பே இலைகள் தளிர் விட்டதால் பெரும் பான்மையான மா பிஞ்சுகள் உதிர்ந்து கீழே விழுந்தன. ஓரளவு விளைந்த காய்கள், பழுக்க வைக்கப்பட்டு மார்க்கெட் டிற்கு வரத்துவங்கி உள் ளன. ஸ்ரீவி., மார்க்கெட்டில் ஒரு கிலோ பஞ்சவர்ணம், சப்பட்டை மாம்பழம் 70 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இவை, கடந்தாண்டு கிலோ 20 முதல் 40 ரூபாய்க்கு விற்கப்பட்டன.

**தக்காளி விலை உடுமலையில் திடீர் உயர்வு**

உடுமலை : உடுமலை தினசரி காய்கறி சந்தையில், தக்காளி விலை மீண்டும் உயரத்துவங்கியுள்ளது. கிலோ 8 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் ஆண்டு முழுவதும் பயிரிடப்படும் கத்தரி, வெண்டை, தக்காளி, பீட்ரூட், மிளகாய் ஆகியவையும், மாநிலத்தின் பிற பகுதிகளிலிருந்து உருளைக்கிழங்கு, பீன்ஸ், கேரட் ஆகியவையும் விற்பனைக்காக உடுமலை தினசரி காய்கறி சந்தைக்கு கொண்டு வரப்படுகிறது.

இச்சந்தைக்கு வரும் காய்கறிகளை கேரளா மாநிலம் மற்றும் வெளியூர் வியாபாரிகளும் விற்பனைக்காக வாங்கிச் செல்கின்றனர். தக்காளியின் வரத்து எதிர்பார்ப்பை விட அதிகளவு இருந்ததால், விலையும் குறைந்தது. சாகுபடி செய்த விவசாயிகள் தக்காளியினை பறிக்காமல் செடியிலேயே விட்டனர். பலர் தக்காளியை தூக்கி குப்பையிலும் வீசினர். தக்காளிக்கு விலை கிடைக்காததால், விவசாயிகள் வேதனை அடைந்தனர். இந்நிலையில், சந்தையில், தக்காளி விலை மீண்டும் உயரத்துவங்கியுள்ளது.

வியாபாரிகள் கூறியதாவது: தக்காளி வரத்து தற்போது குறைந்துள்ளதால், விலை கணிசமாக உயர்ந்துள்ளது. பெட்டி 75 முதல் 80 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரம் கிலோ 5 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட தக்காளி தற்போது, 8 ரூபாய் உயர்ந்துள்ளது. வரத்து குறைந்துள்ளதால், விலை உயர்ந்துள்ளது. என்றனர்.

**வெங்காயம் விலை சரிவு விவசாயிகள் அதிர்ச்சி**

பல்லடம் : சின்ன வெங்காயம் கொள்முதல் விலை சரிவு; விதை வெங்காயம் விலை உயர்வு, பல்லடம் மற்றும் சுல்தான்பேட்டை விவசாயிகளை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் ஒவ்வொரு ஆண்டும் 8,000 ஏக்கர் பரப்பளவுக்கு சின்ன வெங்காயம் மற்றும் பெல்லாரி சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, சின்ன வெங்காயத்தின் விதை வெங்காயம் வாங்கி, ஊன்றி நடவு செய்யும் சாகுபடி முறைக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

விதை வெங்காயம் ஊன்றி, சாகுபடியில் 90 நாளில் வெங்காயத்தை அறுவடை செய்து விடலாம் என்பதால், இம்முறை விவசாயத்தில் விவசாயிகள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர். கடந்தாண்டு 14 ரூபாயாக இருந்த விதை வெங்காயம் விலை, தற் போது 18 ரூபாயாக உள்ளது. ஒரு மாதத்துக்கு முன், 12 ரூபாயாக இருந்த சின்ன வெங்காயத்தின் கொள் முதல் விலை, தற்போது கிலோ ஏழு ரூபாய் அள வுக்கு சரிந்துள்ளது. விதை வெங்காயத்தின் கொள் முதல் விலை உயர்வு, சின்ன வெங்காயம் விலை சரிவு, விவசாயிகளை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.